**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,</u>**

**<u>SIRKALI</u>**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**<u>STC No.465/2021</u>**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | ரேணுகா | Prosecution | DW1 Chief |
| Father Name | க/பெ. குணசேகரன் | Court | JM Court, Sirkali |
| Village | தென்பாதி | Taluk | Sirkali |
| District | மயிலாடுதுறை | Age | 44/2025 |

Solemnly affirmed by Tmt. R. கீதா., Grade III Bench Clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

**<u>20.09.2025.</u>**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**சத்தியப்பிரமாண வாக்குமூலம்**
**முதல் விசாரணை**

**1.** நான் தற்போது சீர்காழி தென்பாதியில் வசித்து வருகிறேன். உமாராணி என்பவரை 2018 முதல் எனக்கு தெரியும். நான் எனது குடும்ப தேவைக்காக அவரிடம் 2019 ம் வருடம் மே – ஜீன் மாதங்களில் கொஞ்சம் கொஞ்சமாக ரூ.2 லட்சத்து 20 ஆயிரம் கடன் வாங்கியிருந்தேன். மேற்கொண்டு பணம் எனக்கு தேவைப்பட்டது. எனது இடத்தை அதற்காக வாதி பெயருக்கு ரூ. 5 லட்சத்திற்கு பதிவு செய்யப்பட்ட அடமாணம்ஏற்படுத்தி கொடுத்தேன். அந்த அடமாண தொகையான ரூ.5 லட்சத்திற்கு ஏற்கனவே கொடுத்த ரூ.2 லட்சத்து 20 ஆயிரம் போக மீதி தொகையை அன்று மாலை கொடுப்பதாக கூறினார்.

2. ஆனால் எனக்கு அவர் பணம் தரவில்லை. நயவஞ்சகமாக பேசி என்னிடம் அடமாண பத்திரம் எழுதி வாங்கிக்கொண்டு அவர் தலைமறைவாகிவிட்டார். அடமாணம் பதிவு செய்யப்பட்ட அன்று நான் எனது ICICI வங்கி கிளையை சேர்ந்த காசோலை ஒன்றை நிரப்பாமல் கையொப்பம் மட்டும் செய்து கொடுத்தேன். நான் வாதிக்கு எதிராக சீர்காழீ காவல்நிலையத்தில் 03.03.2020 அன்று அவர் எனக்கு மீதி தொகை தரவில்லை என்றுபுகார் கொடுத்தேன். போலிசார் அவரை அழைத்து

விசாரித்தார்கள். வாதி போலிசாரிடம் கால அவகாசம்கேட்டார். அதன் பிறகு 21.08.2020 ல் நான் அவரிடம் பணம் கேட்டு தொந்தரவு செய்வதாக சொல்லி வாதி எனக்கு எதிராக அதே காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலிசார் அழைத்து விசாரித்து நான் வாதிக்கு வட்டி மற்றம் அசலுக்காக ரூ.3, 01,650/- தொகை கொடுக்க வேண்டும் என்று சொல்லி எழுதி வாங்கிக்கொண்டு என்னிடமும் அவரிடமும் கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள். மேற்படி தொகையை 21.12.2020 க்குள் கொடுக்க வேண்டும் என்று எழுதி வாங்கிக்கொண்டார்கள். அவ்வாறு பணம்கொடுத்த உடன் அசல் பத்திரம் மற்றும் காசோலையை திரும்ப கொடுத்து விட வேண்டும் என்றும் சொல்லி எழுதி வாங்கிக்கொண்டார்க்ள. அதற்குள்ளாக வாதி இந்த வழக்கை தா்க்கல் செய்துள்ளார்.

3. எனக்கு எதிராக சிவில் வழக்கு ஒன்றையும் வாதி தாக்கல் செய்துவிட்டார். நடந்தது இது தான். வாதி இந்த வழக்கு பொய்வழக்காகும். அதை தள்ளுபடி செய்ய கேட்டுக்கொள்கிறேன்.